முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# AA3 பரீட்சை – 2019 சனவரி

# (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(Processes, Controls and Audit)

2019-01-26
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிறற்படுத்தப்பட முடியாத கணிப்பான்கள் பயன்படுத்தப்படலாம்.*

(6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினா வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினா வினைச் சொல் நிரலிற் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

நீங்கள் முன்னணி மென்பொருள் (IT பிரயோகங்கள்) அபிவிருத்திக் கம்பனி ஒன்றின் வியாபாரப் பகுப்பாய்வாளர் (business analyst) எனக் கருதிக்கொள்க.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இந்த வியாபாரத்தின் மீது கணிசமான தாக்கத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படும் வெளிவாரிச் சூழலின் (external environment) இரண்டு பிரதான அழுத்தக் காரணிகளை **இனங்காண்க**. (02 புள்ளிகள்)

(b) மேலே இனங்காணப்பட்ட பிரதான அழுத்தக் காரணிகள் இந்த வியாபாரத்தின் மீது கொண்டிருக்கக் கூடிய தாக்கங்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

நிருமாணச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள **வரையறுக்கப்பட்ட சக்சஸ் எஞ்சினியரிங் கம்பனியின்** நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்யும் அணியில் **சமந்தி** ஒரு உறுப்பினராவார். அவருக்கு **வரையறுக்கப்பட்ட சக்சஸ் எஞ்சினியரிங் கம்பனியின்** ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (PPE) மீதி தொடர்பான கணக்காய்வு விதிமுறைகளை மேற்கொள்ளும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**வரையறுக்கப்பட்ட சக்சஸ் எஞ்சினியரிங் கம்பனியின்** ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பில் **சமந்தி** இனங்காண வேண்டிய ஏதாவது மூன்று (03) நிதிக் கூற்று உறுதிப்பாடுகளை (financial statement assertions) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**ABC PLC** யின் பணிப்பாளர் சபை, தமது சட்ட நியதிக் கணக்காய்வாளராக ஒரு பட்டயக் கணக்காளர் நிறுவனமான **SW & Co.** இனை நியமிப்பதற்கு எண்ணுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஒரு கம்பனியின் கணக்காய்வாளராக நியமிக்கப்பட முடியாத இரு (02) தரப்பினரை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) **ABC PLC** யின் முதலாவது கணக்காய்வாளராக நியமனத்தை ஏற்றுக்கொள்ள முன்னர் **SW & Co.** மேற்கொள்ள வேண்டிய இரண்டு (02) விதிமுறைகளை (procedure) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

***வரையறுக்கப்பட்ட ரோமா கம்பனி*** தயார் நிலை ஆடைகளை விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனியாகும். **ரோமா கம்பனியின்** முகாமையானது முகாமைப் பணிப்பாளர், நிதி மற்றும் நிருவாக முகாமையாளர் ஆகிய இருவரினால் ஆனது. நடுத்தர வயதுடையவரும் ஆளுமை உடல்வாகு கொண்ட முகாமைப் பணிப்பாளர் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக **ரோமா கம்பனியில்** பணியாற்றி வருவதுடன் மிகவும் நம்பிக்கைக்குரிய ஊழியரும் ஆவார். பணிப்பாளர் சபையானது முகாமைப் பணிப்பாளரின் இயலுமைகள் மீது பூரண நம்பிக்கை கொண்டிருப்பதனால், அவர்கள் கிரமமாக கூடுவதோ அல்லது கம்பனியின் முகாமையை மேற்பார்வை செய்வதில் ஊக்கமான நாட்டத்தினைக் கொண்டிருப்பதோ இல்லை. மேலும், முகாமையானது நிதிசார் அகக் கட்டுப்பாடுகளில் பலவீனங்களை கோடிட்டுக் காட்டுகின்ற, முகாமைக் கடிதத்திலுள்ள விடயங்கள் பற்றிய சட்ட நியதிக் கணக்காய்வாளரின் கேள்விகளுக்கு பதிலளிப்பதில் மிகக் குறைந்தளவு நாட்டத்தையே காட்டுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) சொத்துக்களின் கையாடல் (misappropriation of assets) என்பதனால் கருதப்படுவது என்னவென **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(b) ***வரையறுக்கப்பட்ட ரோமா கம்பனியின்*** மோசடி இடரை (risk of fraud) அதிகரிக்கக்கூடிய இரண்டு (02) புறநிலைகள் / சம்பவங்களை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

பகுதி *A* முடிவு

## <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

***வரையறுக்கப்பட்ட செக்டர்ஸ் கம்பனி*** புதிய பொருளொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்றில் முதலீடு செய்ய விரும்புகின்றது. இந்தச் செயற்றிட்டம் வங்கிக் கடன் ஒன்றின் மூலம் நிதியளிப்புச் செய்யப்பட உள்ளதுடன், வங்கியானது இந்தச் செயற்றிட்டத்திற்கான காசு உட்பாய்வுகள் மற்றும் காசு வெளிப்பாய்வுகளை விபரிக்கும் நிதி எதிர்வுகூறல் ஒன்றினைத் தயாரிக்குமாறு கேட்டுள்ளது. அத்துடன் இந்த நிதி எதிர்வுகூறல் ***வரையறுக்கப்பட்ட செக்டர்ஸ் கம்பனி***யின் கணக்காய்வாளரால் பரீட்சிக்கப்பட்டு, நிதி எதிர்வுகூறல்மீது கணக்காய்வாளர் அபிப்பிராயம் தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) "உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்" (assurance Engagement) என்றால் என்னவென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலுக்கு மூன்று (03) உதாரணங்களை **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(c) ***வரையறுக்கப்பட்ட செக்டர்ஸ் கம்பனியின்*** நிதி எதிர்வுகூறல் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் வகையினை (types of assurance Engagement) **மதிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(A) கணக்காய்வு அணியின் கனிஷ்ட உறுப்பினரான **ரந்துல** 2018 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்காய்வு வாடிக்கையாளரின் உதவிக் கணக்காளரால் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைப் பரிசோதிக்கின்றார். இந்தக் கணக்காய்வு வாடிக்கையாளருக்கு ஒரு நடைமுறைக் கணக்கு மாத்திரம் உள்ளதுடன், **ரந்துல** வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை மீளவும் செய்துபார்க்க எதிர்பார்க்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கணக்காய்வு விதிமுறைகளின் வகைகளான **பரீட்சிப்பினை** (inspection) **அவதானித்தல்** (observation) இலிருந்து **வேறுபடுத்துக.** (04 புள்ளிகள்)

(b) 2018 மார்ச் 31 ஆந் திகதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் மீது **ரந்துல** மேற்கொள்ள வேண்டிய சாத்தியமான மூன்று (03) கணக்காய்வு விதிமுறைகளை (audit procedures) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட லோக்கல் ரீரெயிலர்ஸ் கம்பனியின்** 2018 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்யும் கணக்காய்வு அணியில் **அமீன்** ஒரு உறுப்பினராவார். இதன் தலைமை அலுவலகம் கொழும்பில் குத்தகைக்குப் பெறப்பட்ட கட்டிடமொன்றில் அமைந்துள்ளதுடன் வாடகை ஒவ்வொரு காலாண்டும் முன்னதாகச் செலுத்தப்படும். காலாண்டிற்கான வாடகை ரூ. 30,000/- ஆகும். 2018 ஆம் ஆண்டில் வாடகையாக ரூ. 150,000/- செலுத்தப்பட்டது. 2018 சனவரி 01 ஆந் திகதி முன்கொண்டு வரப்பட்ட வாடகை முற்கொடுப்பனவு மீதி ரூ. 30,000/-.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வாடகைச் செலவு மற்றும் 2018 டிசெம்பர் 31 இல் வாடகை முற்கொடுப்பனவு ஆகியவற்றைக் கணக்காய்வு செய்யும்போது **அமீன்** மேற்கொள்ள வேண்டிய மூன்று (03) கணக்காய்வு விதிமுறைகளை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(a) கணக்காய்வாளர் வெளிவாரி உறுதிப்படுத்தல் விதிமுறைகளை (external confirmation procedures) பயன்படுத்துவதன் நோக்கம் தொடர்புடையதும் நம்பகமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கு அத்தகைய விதிமுறைகளை வடிவமைத்து மேற்கொள்ளல் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(i) வெளிவாரி உறுதிப்படுத்தல்கள் பயன்படுத்தப்படக்கூடிய மூன்று (03) சந்தர்ப்பங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(ii) கணக்காய்வாளர் உறுதிப்படுத்தற் கோரிக்கைகளை அனுப்புவதை முகாமை அனுமதிக்க மறுக்கும் பட்சத்தில் கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய இரண்டு (02) நடவடிக்கைகளை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(b) உரிமமொன்றிற்கான கணக்காய்வு ஈடுபடுத்தலின் கட்டுறுப்புகளுக்கு (terms) இணங்குவதில் முகாமை மற்றும் ஆளுமை பாரப்படுத்தப்பட்டு உள்ளோரின் வகிபாகம், உரிமத்தின் ஆளுமைக் கட்டமைப்பு (governance structure) மற்றும் தொடர்புபட்ட சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளில் தங்கியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

கணக்காய்வு ஈடுபடுத்தற் கடிதமொன்றில் (audit engagement letter) உட்படுத்தப்பட வேண்டிய மூன்று (03) விடயங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

(A) நிறுவனங்கள் அவற்றின் இடர்களை முகாமை செய்தல் வேண்டும். இடர் முகாமைத்துவ சட்டகம் பல படிமுறைகளைக் கொண்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

இடர் முகாமைத்துவச் சட்டகத்தின் படிமுறைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட ஜனாதி எக்ஸ்போர்ட் கம்பனி (JEL)** தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கிறது. **JEL,** 500 க்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டுள்ளதுடன் அவர்கள் கீழ்க்காட்டியவாறு **JEL** இன் பல்வேறு பிரிவுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளனர் :

| பிரிவு | ஊழியர் எண்ணிக்கை |
|---|---|
| உற்பத்தி | 440 + |
| தரக் கட்டுப்பாடு | 16 |
| பொதியிடல் | 24 |
| பொருட் காவுகை (transport) | 12 |
| நிதி | 10 |
| மனித வளம் (HR) | 3 |
| சந்தைப்படுத்தல் | 4 |

புதிய ஊழியர் ஒருவருக்கான தேவை ஏற்படும்போது, உரிய பிரிவுத் தலைவரினால் ஆட்சேர்ப்புக் கோரிக்கைப் படிவமொன்று பூர்த்திசெய்யப்பட்டு அனுமதிக்காக பொது முகாமையாளருக்கு (GM) அனுப்பப்பட வேண்டும். வாராந்த மனித வளக் கூட்டத்தில் பொது முகாமையாளர், சம்பளம், படிகள், தேவையான தகைமைகள் ஆகியவற்றைத் தீர்மானித்து அனுமதி வழங்குவார். கம்பனியானது விளம்பரப்படுத்தி, நேர்முகப் பரீட்சைகளை நடத்துகின்ற ஒரு முறைசார்ந்த ஆட்சேர்ப்பு நடைமுறையினைக் கொண்டுள்ளது. உரிய பிரிவின் தலைவருடன் இணைந்து மனித வளப் பிரிவினால் சாத்தியமானளவு விரைவாக புதிய ஊழியர் சேர்க்கப்பட்டவுடன், நியமனக் கடிதம் வழங்கப்பட்டு அது பற்றி சம்பளப் பட்டியல் அலுவலருக்கும் மனித வளப் பிரிவின் பெயர்வழிக் கோவைகளைப் (Personal file) பேணுகின்ற அந்தரங்கச் செயலாளருக்கும் அறிவிக்கப்படும்.

ஊழியர்களின் உள்வருதல், வெளிச்செல்லல் நேரங்களைப் பதிவுசெய்வதற்கு ஒவ்வொரு பிரிவிலும் கைவிரல் அடையாளப் பதிவு இயந்திரங்கள் உள்ளன. உற்பத்திப் பிரிவின் நிறைவேற்று ஊழியர்கள் அல்லாதோருக்கு வேலை செய்த மணித்தியாலத்தின் அடிப்படையில் சம்பளம் செலுத்தப்படுகிறது. பிரிவு மேற்பார்வையாளர்களும் உரிய பிரிவின் தலைவரும் மேலதிக நேர வேலைத் தேவைப்பாட்டினை அங்கீகரிப்பர்.

நிறைவேற்று ஊழியர்கள் அல்லாதோர் தமக்கு சம்பள முற்பணம் தேவைப்படுமிடத்து உரிய மாதத்திற்கு 15 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். நிறைவேற்று ஊழியர்கள் அல்லாத ஊழியர்களுக்கு சம்பள முற்பணம் ஒவ்வொரு மாதமும் 20 ஆந் திகதியும் சம்பளம் அதற்கு அடுத்த மாதம் 10 ஆம் திகதியும் செலுத்தப்படும். சம்பள முற்பணமாக நிலையானதொரு தொகை செலுத்தப்படும். சம்பள முற்பணம் உட்பட ஊழியர்களுக்கான சகல கொடுப்பனவுகளும் வங்கி மாற்றங்களினூடாகச் செலுத்தப்படும். சகல சட்டநியதிக் கழிப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டு அவை உரிய காலத்தில் உரிய ஒழுங்குபடுத்தல் அதிகார அமைப்புகளுக்குச் செலுத்தப்படுவதை சம்பளப் பட்டியல் அலுவலர் உறுதிசெய்வார்.

சம்பளப் பட்டியல் தயாரானதும் கணக்காளரும் நிதிப் பிரிவுத் தலைவரும் அதனை அங்கீகரிப்பர். பட்டயக் கணக்காயர் நிறுவனம் ஒன்று அகக் கட்டுப்பாட்டினை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ளதுடன், தமது அகக் கட்டுப்பாட்டுச் சோதனையின் அங்கமாக கிரமமான அடிப்படையில் சம்பளப் பட்டியல் கணிப்பீடுகளையும் ஊழியர் பதிவேடுகளையும் செவ்வை பார்ப்பர்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) அனுசரணை வழங்கும் அமைப்புகளின் குழுவின்படி (COSO) அகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஒரு கூறான ''கண்காணித்தல் (Monitoring)'' எனும் பதத்தினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ஜனாதி எக்ஸ்போர்ட் கம்பனியின்** சம்பளப் பட்டியல் முறைமை தொடர்பான ஐந்து (05) அகக் கட்டுப்பாட்டுப் பலங்களை (strengths) **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(c) மேலே (b) இல் இனங்காணப்பட்ட ஒவ்வொரு பலங்களினதும் நோக்கங்களைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(C) தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் (IT controls), பொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகளைக் கொண்டன. தகவல் தொழில்நுட்பப் பொதுக் கட்டுப்பாடுகள், முறைமையின் செயற்பாடுகள் மீது ஒட்டு மொத்தக் கட்டுப்பாட்டுச் சட்டகமொன்றினைத் தாபிக்கும் அதே வேளை பிரயோகக் கட்டுப்பாடுகள், முறைமை பராமரிக்கின்ற பிரயோகங்கள் (Applications) மீதான குறிப்பான கட்டுப்பாடுகள் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(i) IT பொதுக் கட்டுப்பாடுகளுக்கு மூன்று (03) உதாரணங்களை **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(ii) பிரயோகக் கட்டுப்பாடுகளுக்கு மூன்று (03) உதாரணங்களை **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) **திரு. மெண்டிஸ் ''பீட்டா சப்பாத்துக்கள்''** எனும் சப்பாத்துக் கடை ஒன்றினை இல. 69, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரியிலுள்ள தனக்குச் சொந்தமான இரண்டுமாடிக் கட்டடத்தில் நடத்தி வருகிறார். 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதி இந்தக் கடை தீயினால் அழிவுற்றதுடன் கடையிலிருந்த சகல உருப்படிகளும் அழிவடைந்திருந்தன. கடைக்கு வெளியே ஓரிடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த சப்பாத்துத் தொக்குகளைப் பயன்படுத்தியும் அழிவடைந்த கட்டடத்தினை 2019 செப்ரெம்பர் மாதமளவில் மீளமைத்தும் தமது வியாபாரத்தினைத் தொடங்குவதற்கு **திரு. மெண்டிஸ்** நம்பிக்கை கொண்டுள்ளார். காப்புறுதிக் கோரிக்கையொன்று விடப்பட்டு அது காப்புறுதிக் கம்பனியினால் கவனத்திற் கொள்ளப்பட்டு வருகின்றது. **''பீட்டா சப்பாத்துக்களின்''** கணக்காளர் 2018 செப்ரெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்றார்.

**திரு. மெண்டிசின்** இடர்க் குறைப்புத் திட்டத்தின்படி, கணக்காய்வாளர் தொடர்ந்தியங்கும் தாபன (going concern) அடிப்படையில் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும், இது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட வெளிக்காட்டல்களும் பொருத்தமானவை எனத் தீர்மானிக்கின்றார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கம்பனியொன்றின் நிதிக் கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தைத் தயாரிப்பதில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஐந்து (05) விடயங்களைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(b) 2018 செப்ரெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான **பீட்டா சப்பாத்துக்கள்** கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கையில் வேறு திருத்தங்கள் (Implication) ஏதும் தேவையா என **மதிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(B) அடிப்படைத் தத்துவங்களுடனான (fundamental principles) ஒத்திசைவு பல்வேறு புறநிலைகள் மற்றும் தொடர்பு முறைகளால் அச்சுறுத்தலுக்கு ஆளாகலாம்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

அடிப்படைத் தத்துவங்களுடனான ஒத்திசைவு தொடர்பான கீழ்வரும் இடர்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு (02) உதாரணங்கள் வீதம் **இனங்காண்க.**

(a) சுய நாட்ட இடர் (Self-interest threat)

(b) சுய மீளாய்வு இடர் (Self-review threat)

(c) துணை வலிமை இடர் (Advocacy threat) (06 புள்ளிகள்)

(C) தங்க நகை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள **வரையறுக்கப்பட்ட ஹன்ட் கம்பனியானது ஸ்ரீவ் அன்ட் ஸ்ரோம் பங்காளர்கள் (S & S)** கணக்காய்வு நிறுவனத்தின் மீண்டுவரும் (recurrent) சட்ட நியதிக் கணக்காய்வு வாடிக்கையாளர் ஆகும். **ஹன்ட் கம்பனி** தமது கணக்கேடுகளில் பதியப்பட வேண்டிய வருமான வரிப் பரிப்பின் கணிப்பீடு அடங்கலாக வருமான வரி தொடர்பான சகல விடயங்களிலும் தமக்கு உதவுமாறு அண்மையில் **S & S** இடம் கேட்டுக்கொண்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **ஹன்ட் கம்பனியின்** வரி ஆலோசகராக மேலதிக ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்வது தொடர்பில் **S & S** மேற்கொள்ள வேண்டிய படிமுறைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **S & S** தமது நிறுவனத்துள் தரக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினைத் தாபித்திருப்பின், ''வாடிக்கையாளர் தொடர்பினை ஏற்றுக்கொள்ளல் மற்றும் தொடர்தலின்'' மூலகத்தினை (element) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |